பக்கங்கள்: நான்கு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 4.00

சுடர்: 6 பிரமோதூத ஹூ மாசி மீ 15 உ புதன்கிழமை (27-02-1991) UTHAYAN - A Lively Tamil National Daily கதிர்: 92

# சதாம் ஹுசேன் பின்வாங்கினார்!

## தோற்று ஓடுகிறது ஈராக்! விடோம் என்கிறார் புஷ்

'' ஈராக் படைகள் தாங்களாக வெளியேறவில்லை; யுத்தத்தில் தோற்று பின்வாங்கிச் செல்கின்றன '' — இப்படி ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ் நேற்றுத் தெரிவித்தார்.

குவைத் தொடர்பாக ஐ. நா. பாதுகாப்புச் சபை நிறைவேற்றிய சகல தீர்மானங்களையும் ஈராக் ஜனாதிபதி சதாம் ஏற்கும் வரை பன்னாட்டுப் படைகளின் யுத்தம் தொடரும் என்றும் திரு. புஷ் வலியுறுத்திச் சொன்னார்.

ஏற்கனவே சரணடைந்த 30 ஆயிரம் ஈராக்கிய படையினர் போன்று — எஞ்சிய ஈராக்கிய படையினரும் தங்கள் ஆயுதங்களைக் கீழே போட்டு விட்டு சரணடைந்தால் மேலும் உயிரிழப்புக்கள் ஏற்படுவதைத் தடுக்கலாம் என்றார் அவர்.

புஷ் மேலும் கூறியதாவது:- [4 ஆம் பக்கம் பார்க்க]

## யுத்தம் தொடரும் என்கிறது அமெரிக்கா

ஈராக் படைகளுக்கு எதிரான தரை யுத்தம் தொடரும் என்று அமெரிக்கா நேற்று மீண்டும் அறிவித்தது.

படை விலகல் குறித்து இரண்டாவது முறையாக பக்தாத் வானொலி மூலம் ஜனாதிபதி சதாம் ஹுசேன் அறிவித்ததைத் தொடர்ந்து ஜனாதிபதி புஷ் தனது உயர் பாதுகாப்பு அதிகாரிகளுடன் பேச்சுக்கள் நடத்தினார்.

அதன் பின்னர் வெள்ளை மாளிகைப் பேச்சாளர் செய்தியாளர்களிடம் கூறியதாவது; '' ஜனாதிபதி சதாம் ஹுசேன் படை விலகல் பற்றி தனது உரையில் குறிப்பிட்டாரே தவிர, ஐ நா. பாதுகாப்புச் சபை குவைத் தொடர்பாக எடுத்த தீர்மானங்கள் அனைத்தையும் ஏற்றுக் கொள்வதாகக் கூறவில்லை.

'' நிபந்தனையற்ற முறையில் படைகளை விலக்கிக் கொள்வதாக அவர் பகிரங்கமாக அறிவிக்க வேண்டும். குவைத்துக்கு நஷ்டஈடு வழங்குவது உட்பட சகல ஐ. நா. பாதுகாப்புத் தீர்மானங்களை ஏற்றுக் கொள்வதாகவும் [ 4 ஆம் பக்கம் பார்க்க]

## ஈராக் படை பலத்தை அழிக்க கங்கணம்!

குவைத்தில் இருந்து ஈராக்கிய படைகள் டாங்கிகளுடன் ஈராக்கின் வடபகுதி நோக்கிச் சென்றுகொண்டிருப்பதாக நேற்று நண்பகல் அறிவிக்கப்பட்டது.

இதேவேளை — வெளியேறிக்கொண்டிருக்கும் ஈராக் படைகள் மற்றும் டாங்கிகள் மீது விமான தாக்குதல்களை நடத்தி அவற்றை அழிக்கும்படி பன்னாட்டுப் படையினருக்கு உத்தரவிட்டிருப்பதாக மற்றொரு செய்தி தெரிவித்தது.

யுத்த நிறுத்தம் ஒன்று வருவதற்கு முன்னர், ஈராக்கின் படை பலத்தை பெரும்பாலும் அழித்துவிட வேண்டும் என்பதில் பன்னாட்டுப் படையினர் தீவிரமாக இருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது.

## 5 லட்சம் ஈராக்கியரை வளைக்க முயற்சி

குவைத்தில் உள்ள சுமார் 5 லட்சம் ஈராக்கிய வீரர்கள் தமது நாட்டுக்குள் மீளத் திரும்ப விடாது அவர்களைச் சுற்றி வளைக்கும் நடவடிக்கைகளில் பன்னாட்டுப் படையினர் நேற்றும் தொடர்ந்து ஈடுபட்டிருந்தனர் என்று அறிவிக்கப்பட்டது,

படை விலகல் பற்றிய ஜனாதிபதி சதாமின் அறிவிப்பு இந்த நடவடிக்கையை பாதிக்கவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டது.

## வெறுங்கையுடன் வெளியேற கட்டளை

ஈராக் படையினர் டாங்கிகள் மற்றும் ஆட்டிலறி ஆயுதங்களை குவைத்தில் கைவிட்டுவிட்டு வெளியேற வேண்டும் என்று அமெரிக்கா நேற்று அறிவித்தது.

வெறுங்கையுடன் செல்லும் ஈராக் படையினர் மீது பன்னாட்டுப்படை தாக்குதல் நடத்தாது என்றும் —

ஆயுதங்களுடன் செல்லும் ஈராக் படை மீது தாக்குதல் நடத்தப்படும் என்றும் வெள்ளை மாளிகைப் பேச்சாளர் சொன்னார்.

இதற்கிடையில், படை விலகல் அறிவிப்பைத் தொடர்ந்து வளைகுடாவில் யுத்த நிறுத்தம் ஒன்றைக் கொண்டுவரவேண்டும் என்ற சோவியத் யூனியனின் யோசனையை ஆராய்முகமாக நேற்றுக் கூடிய ஐ. நா. பாதுகாப்புச் சபை முடிவு ஏதும் எடுக்காத நிலையில் ஒத்திவைக்கப்பட்டது. நேற்று இரவு சபை மீண்டும் கூடுவதாக இருந்தது.

## குவைத் மீண்டும் சுதந்திர நாடானது

கடந்த ஏழு மாதங்களாக ஈராக்கின் பிடியில் இருந்த குவைத் நேற்று மாலை நான்கு மணிக்கு [இலங்கை நேரப்படி] விடுதலை பெற்றது. துபாய் தொலைக்காட்சி நிறுவனம் நேற்று பிற்பகல் இதனை அறிவித்தது.

இதற்கு முன்னர் — ஐ. நா. பாதுகாப்புச் சபைக் கூட்டத்தில் கலந்துகொண்ட ஈராக் தூதர் அல்ஹம்பாரி அங்கு பேசுகையில், நிபந்தனையற்ற முறையில் குவைத்தில் இருந்து ஈராக்கிய படைகள் வெளியேறிக்கொண்டிருக்கின்றன என்ற தகவலை வெளியிட்டார்.

சவூதியில் உள்ள குவைத் மன்னர் அல்சபா தலைமையிலான அரசு விரைவில் குவைத்தில் இருந்து செயற்படவுள்ளது. இதற்கான ஏற்பாடுகளை மன்னர் அல்சபா செய்து வருகிறார்.

குவைத்தில் பல கட்டடங்களில் குவைத் தேசியக்கொடி மற்றும் பன்னாட்டுப் படைகளின் தேசியக் கொடிகளை குவைத் படையினரும் பன்னாட்டுப் படையினரும் ஏற்றி சுதந்திரம் பெற்றதைக் கொண்டாடினர்.

## சைரன் ஒலி மத்தியில் சதாமின் உரை

'' ஈராக்கின் ஒரு பகுதியாக குவைத் இனியும் இருக்காது. குவைத்தில் இருந்து எனது படைகள் இன்றுடன் வெளியேறுகின்றன '' — ஈராக் ஜனாதிபதி சதாம் நேற்றுப் பிற்பகல் பக்தாத் வானொலியில் பேசுகையில் முன்கண்டவாறு அறிவித்தார்.

'' ஈராக் மீது ஐ. நா. விதித்த பொருளாதார முற்றுகையும் குவைத்தில் இருந்து எனது படைகள் வாபஸாவதற்கு உரிய காரணங்களில் ஒன்றாகும் '' என்றார் அவர்.

'' பன்னாட்டு ஆக்கிரமிப்புக்கு எதிராக நடத்தப்பட்ட ஒரு மாத கால போரில் ஈராக்கிய வீரர்கள் வீரமுடன் போரிட்டார்கள். குவைத் ஈராக்கின் ஒரு பகுதியாகக் கடந்த ஆண்டு ஆகஸ்ட் 2ஆம் திகதி முதல் இருந்து வந்தது. கடந்த இரவு [ திங்கள் ] முதல் குவைத் ஈராக்கின் கட்டுப்பாட்டில் இல்லை. ஆனாலும் [illegible] யும், அரசமைப்புப் படியும் குவைத் எமது பிரதேசமே '' — என்று சதாம் கூறினார்.

ஜனாதிபதி சதாமின் வானொலி உரையை, பக்தாத்தில் அடிக்கடி எழுப்பப்பட்ட சைரன் ஒலிகளால் தெளிவாகக் கேட்க முடியாமல் போனதாக பி. பி. சி. அறிவித்தது.

## குவைத்தை விட்டு வெளியேற ஈராக் படைக்கு திடீர்பணிப்பு

லண்டன், பெப்ரவரி 27

குவைத் நாட்டைத் திடீரெனக் கைப்பற்றி அதை விடாப்பிடியாக வைத்திருந்த ஈராக் ஜனாதிபதி சதாம் ஹுசேன் நேற்று திடீரென பின்வாங்கினார்!

குவைத்தை விடுவிக்க நேச நாட்டுப் படைகள் முனைப்பான தரையுத்தத்தை ஆரம்பித்து 48 மணி நேரத்தின் பின் குவைத்திலிருந்து ஈராக் படைகள் உடனடியாக வெளியேறும் என்ற அறிவிப்பை அவர் விடுத்தார்.

கடந்த ஆகஸ்ட் இரண்டாம் திகதி அதிரடி இராணுவ நடவடிக்கையின் மூலம் குவைத்தை ஈராக் படைகள் கைப்பற்றியிருந்தன.

அதன் பின்னர் குவைத்தை விட்டு ஈராக் படைகள் வெளியேற வேண்டும் என்று ஐ. நா. தீர்மானம் மேற்கொண்டது.

இத் தீர்மானத்தை அமுல் செய்வதற்காக அமெரிக்கா தலைமையிலான நேச நாட்டுப் படைகள் கடந்த ஜனவரி 17 ஆம் திகதி ஈராக்கிற்கு எதிரான போரைத் தொடங்கின.

அன்றிலிருந்து பெப்ரவரி 23 ஆம் திகதி வரை நேசப்படைகள் ஈராக் மற்றும் குவைத் [4 ஆம் பக்கம் பார்க்க]

## ஆனையிறவு ராணுவம் கடும் ஷெல் வீச்சு!

யாழ்ப்பாணம், பெப். 27

நேற்று முன்தினம் மாலை 6 மணி முதல் நள்ளிரவு 11-30 மணி வரை ஆனையிறவு இராணுவ முகாமிலிருந்து விடுதலைப் புலிகளின் காவல் அரண்களை நோக்கி கடும் ஷெல் தாக்குதல்கள் நடத்தப்பட்டன. 'பரா' வெளிச்சக் குண்டுகளும் இடையிடையே ஏவி விடப்பட்டன.

விடுதலைப் புலிகளுக்கு எது வித சேதமும் ஏற்படவில்லை எனத் தெரிவிக்கப்பட்டது.

## ஊர்காவலர் அரண் மீது ஏறாவூரில் தாக்குதல்

யாழ்ப்பாணம், பெப். 27

மட்டக்களப்பு மாவட்டம் ஏறாவூர் அலியார் இராணுவ முகாமில் இருந்து 200 யார் தூரத்தில் உள்ள ஊர்காவல் படையின் காவல் அரண் ஒன்றின் மீது நேற்று அதிகாலை விடுதலைப் புலிகள் தாக்குதல் நடத்தினர்.

இந்தத் தாக்குதல் சம்பவத்தின் போது ஊர்காவலருக்கு ஏற்பட்ட சேதங்கள் குறித்து தெரியவில்லை.

விடுதலைப் புலிகள் தரப்பில் லெப்டினன்ட் விகடன் வீரமரணம் அடைந்தார்.

[உ-5]

## முச்சந்தி முரளி



பின்வாங்கிறவர் பதுங்கித் திரும்பப் பாஞ்சாலும் பாய்வார் .........!

## பிரசுரமும் வேட்டும்

யாழ்ப்பாணம், பெப். 27

மீசாலைப் பகுதியில் நேற்றுக் காலை 9-10 மணியளவில் ஹெலி ஒன்று துண்டுப் பிரசுரங்களை வீசியதோடு, வேட்டுக்களையும் தீர்த்தது.

[ஓ]

## லொறி மீது ஹெலி சூடு

தென்மராட்சி, பெப். 27

நேற்றுக் காலை 9-15 மணிக்கு புத்தூர் சந்தியில் உணவுப் பொருள்களுடன் சென்றுகொண்டிருந்த லொறி மீது ஹெலிக்கொப்டரிலிருந்து துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டது.

[ஒ-117]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

சண்ணாடிமேசைகள், கட்டில்கள், மெத்தைகள், சிங்கர் தையல் மெஷின், சாப்பாட்டு மேசை, லாச்சியுடன் கவுண்டர்மேசை, சதிரை, வீட்டுக் கதவுகள், பனைமரங்கள், சிலாகைகள், சீற்முகட்டு ஓடுகள் எம்மிடம் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: 07, கைலாசபிள்ளையார் கோவில் பின் வீதி, நல்லூர். [15979]

சிங்கர் குளிர்சாதனப் பெட்டி [நான்கு மாதங்கள் மாத்திரம் பாவித்தது] விற்பனைக்கு உண்டு. சவோய் ஹோட்டல், 28/18, மணிக்கூண்டு வீதி, யாழ்ப்பாணம். [14921]

ஆனந்தா கலண்டர் 1991 ஆங்கில, தமிழ் திகதிகளும் சகல விரதநாட்களும், அட்டமி, நவமி, அரசாங்க விடுமுறைகள், விஷேட தினங்கள் யாவும் அடங்கியது, ரூபா 22/- எங்கும் கிடைக்கும். ஆனந்தா புத்தகசாலை, யாழ்ப்பாணம். [15985]

## தவறிவிட்டது

641451193V இலக்கம் உடைய அடையாள அட்டை தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து இல. 10, கதிற்றல் வீதி, யாழ்ப்பாணம் அல்லது உதயன் காரியாலயத்தில் ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். [15981]

## பரிசு தரும் 'அக்கினி'

மீரா வெளியீடான ''அக்கினி'' நாவலை வாங்கியவர்கள் இணைக்கப்பட்டிருக்கும் கூப்பனை [15, பங்குனி] அனுப்புங்கள் குலுக்கலில் தெரிவாகும் முதல் பத்து வாசகர்களுக்கு, !ஒவ்வொருவருக்கும் 400/- பெறுமதியான புத்தகங்கள் அன்பளிப்பாக வழங்கப்படும். [15986]

## மணமகள் தேவை

யாழ். இந்து 30 வயது பொறியியலாளருக்கு அழகிய பட்டதாரி [B. Sc.B. Com] மணப்பெண் தேவை. [சித்திரை, பரணி, அத்தம், புனர்பூசம்] பொருந்தக்கூடியவை. மற்றும் சாதகக் குறிப்புடன் முழு விவரத்தையும் தரவும். தொடர்பு: 183, C/o உதயன். [15989]

## சோதிட மாந்திரீக நிபுணர்

உங்கள் பிரச்சினை எதுவாயினும் உடனடியாகத் தீர்வு காண்பதற்கு மட்டக்களப்பு பரம்பரை சோதிட மாந்திரீக நிபுணரைக் கலந்தாலோசியுங்கள். ''சக்தி சரவணா'' 210, கஸ்தூரியார்வீதி, யாழ்ப்பாணம். [யாழ்ப்பாண இந்துக்கல்லூரி மைதானம் முன்பாக] தினசரி பகல் 9 மணி தொடக்கம், 3 மணி வரை சந்திக்கலாம்: வியாழன் விடுமுறை. [15879]

## புத்தகங்கள்

பல்தெரிவு வினாக்கள் மூலம் பொது இரசாயனமும், பௌதீக இரசாயனமும் ஆக்கம்: திருமதி இராஜேஸ்வரி மகேஸ்வரன் B. Sc [இரசாயன பேராசிரியர் யாழ். பல்கலைக்கழகம்] ம செல்வரத்தினம் B. Sc விலை ரூபா 75/- A/L உயர்தர மாணவர்களின் இரசாயனப் பகுதியின் முழு பகுதிகளும் அடங்கியது. வெளியீடு: விற்பனை பூபாலசிங்கம் புத்தகசாலை, யாழ்ப்பாணம். [சி-5784]

---

## கட்டட ஒப்பந்தக்காரர்களுக்கு விசேட அறிவித்தல்

ICTAD இல் பதிவு செய்ய விரும்பும் கட்டட ஒப்பந்தக்காரர்கள் உடனடியாக எங்கள் காரியாலயத்தில் தொடர்பு கொள்ளவும்.

செயலாளர்,
வடமாகாண ஒப்பந்தகாரர் சங்கம்,
15, கொழும்புத்துறை வீதி,
யாழ்ப்பாணம்.

[சி-5802]

---

# BECON

ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

## G. A. Q., B. A. வகுப்புகள்

பொருளியல்

S. வரதராஜன் B. A. (Hons)

G. A. Q — வினா - விடை வகுப்பு
சனி 3.00 P.m.

B. A — முழுப்பாடத்திட்ட வகுப்பு
சனி 2.00 P.m.

**ஆரம்பம்:- 2-3-1991**

[15983]

---

## 5 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்:
3 11 - 1925

மறைவு:
26 - 2 - 1986

திதி: 27 - 2 - 1991

**அமரர் வேலுப்பிள்ளை கந்தையா**
[கந்தமுத்து]
[இளைப்பாறிய பொலீஸ் உத்தியோகத்தர், வட்டுக்கோட்டை]

உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம். உங்கள் பிரிவால் துயருறும்;
அன்பு மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், சகோதரர்கள்.

திருமதி பாக்கியலட்சுமி கந்தையா [கந்தமுத்து]
''யோகவாசம்''
வட்டு. மேற்கு,
வட்டுக்கோட்டை.

[15885]

---

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



| மலர்வு: | உதிர்வு: |
|---|---|
| 04 | 28 |
| 05 | 01 |
| 1924 | 1991 |

**அமரர் செல்லையா இராமர்**

திதி: 27 — 02 — 1991

கொக்குவில் கிழக்கு பொற்பதி வீதியைச் சேர்ந்த அன்னார் பொதுநல சேவையாளரும், கொக்குவில் நந்தாவில் கற்புலத்து மனோன்மணி அம்பாள் ஆலய வழிபடுவோர் சங்க செயற்குழு உறுப்பினருமாவார். அன்னாரது குடும்பத்தவருக்கு எமது சங்கம் சார்பான நினைவு அஞ்சலியை செலுத்துவதோடு அன்னாரது ஆத்ம சாந்திக்காக அம்பாளை இறைஞ்சுகின்றோம்.

**கொக்குவில் நந்தாவில் கற்புலத்து மனோன்மணி அம்பாள் ஆலய வழிபடுவோர் சங்கம்** [15982]

---

# LADY SECRETARY

Wanted immediately a Lady Secretary who can be a personal Secretary and a part-time Librarian. The person applying should be Familar with Secretarial work and Reception, and take care of a small Library. She should be able to work with Electronic Type-writers, as well as cut stencils and make copies.

Applications close on **8th March 1991.**

Apply to:-

**The Executive Director,**
''Shanthiyaham''
P. O. Box 28,
Jaffna.

[15990]

---

மீண்டும் மலர்கின்றது!

# இந்து
# THE HINDU

[யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி பழைய மாணவர் சங்கம் வெளியிடும் சஞ்சிகை]

★ பழைய மாணவர்கள் பற்றிய விவரங்கள்-குறிப்புகள் சஞ்சிகையில் இடம் பெறும். எனவே தயவு செய்து ஒவ்வொரு பழைய மாணவனும் தம்மைப் பற்றிய விவரங்களை [பெயர், முகவரி, தொழில், தகைமைகள்] உடனடியாக 20-03-91க்கு முன்னதாகஎமக்குஅனுப்பி உதவுக.

★ பழைய மாணவர்கள் தமது கல்லூரி வாழ்வில் மறக்கமுடியாத சம்பவங்களைச் சுருக்கமாக எழுதி அனுப்பினால் அவை பிரசுரத்திற்கு ஏற்கப்படும்.

★ தமிழிலும், ஆங்கிலத்திலும் விடயதானம் செய்யலாம்.

★ குறிப்பிட்ட அளவு பிரதிகளே வெளியிடுவதால் தயவு செய்து பிரதிகளை முன்பதிவு செய்ய வேண்டுகின்றோம்.

முன்பதிவுக்கட்டணம் ரூபா 100/-

**தங்களை வளர்த்து ஆளாக்கிய அன்னையின் அழைப்பாக இதனை ஏற்றுக்கொள்ளவும்.**

— நன்றி —

தொடர்பு கொள்க.

ஆசிரியர்,
" இந்து "
பழைய மாணவர் சங்கம்,
யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி.

[சி-5801]

---

## 6 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



| மலர்வு- | உதிர்வு- |
|---|---|
| 20 | 05 |
| 02 | 03 |
| 1936 | 1985 |

அமரர்

**கணபதிப்பிள்ளை மயில்வாகனம்**

[பரந்தன் இரசாயன கூட்டுத்தாபனம், கணேசபுரம், கிராம முன்னேற்றச்சங்கத் தலைவர்]

திதி: 27 - 02 - 1991

என்றும் உங்கள் நினைவில் வாழும்:
அன்பின்:
மனைவி, பிள்ளைகள்.

கரடிப்போக்கு,
கிளிநொச்சி

[15967]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## தமிழர் வங்கிகள்

வடக்கு - கிழக்கின் அபிவிருத்தித் திட்டங்களுக்கு உதவுவதற்கெனத் தனியான வங்கி ஒன்று நிறுவப்பட வேண்டும்.

யாழ்ப்பாணம் செயலகத்தில் அண்மையில் நடைபெற்ற மாநாடு ஒன்றில் இந்த நல்ல யோசனை தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

யுத்தத்தால் அழிந்து போயுள்ள தமிழ்ப் பிரதேசங்களை மீண்டும் கட்டி எழுப்பவும், அவற்றின் பொருளாதாரக் கட்டமைப்புகளைப் பலப்படுத்தவும், மேம்படுத்தவும் அபிவிருத்தி வங்கி இன்றைய அவசியத் தேவை.

தமிழ்ப் பிரதேசங்களின் பொருளியல், சமூக மீட்சிக்கு கொழும்பு அரசாங்கம் உதவும் என்று எவரும் எதிர்பார்க்க முடியாது. தமிழர் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு ஒன்று காணப்பட்டாலும் கூட, கொழும்பு அரசும், அதன் வங்கிகளும் தமிழர்களுக்கு உதவப்போவதில்லை.

எனவே பணவசதி உள்ள தமிழர்கள், நிதிவளம் உள்ள தமிழர் நிறுவனங்கள், வெளிநாடுகளில் வாழும் பணபலமுள்ள தமிழர்கள் சேர்ந்து இப்போதே அபிவிருத்தி வங்கி ஒன்றை நிறுவுவது அத்தியாவசியம்.

அரச சார்பு வங்கிகள் வடக்கு-கிழக்குத் தமிழ் வாடிக்கையாளர்களை இப்போது எப்படி வஞ்சிக்கின்றன என்பது வெள்ளிடைமலை. தமிழர்கள் பலர் அரச வங்கிகளின் வாடிக்கையாளர்கள். தாங்கள் கஷ்டமுறும் வேளையில் கைகொடுக்கும் என்ற முழு நம்பிக்கையுடன், பாடுபட்டுத் தேடிய பணத்தைச் சேமிப்பிலும், நடைமுறைக் கணக்கிலும் இட்டார்கள். ஆனால் நெருக்கடி நிலை, பணப்புழக்கம் இல்லை என்ற காரணங்களைக் காட்டி அவர்களுக்கு ஐநூறும், ஆயிரமும் கிள்ளித் தெளிக்கின்றன அரச வங்கிகள்!

வாடிக்கையாளருக்குச் செய்யவேண்டிய கடமையில் இருந்து அவை தவறிவிட்டன. வாடிக்கையாளரின் பணத்தை கொழும்பில் தமது முதலீடாக்கிக் கொண்டு, தமது தேவைகளுக்கு எடுத்துச் செலவு செய்து கொண்டு, தமிழ் வாடிக்கையாளருக்குச் செய்யவேண்டிய கட்டாயப் பொறுப்பிலிருந்து தவறுகின்றன. தட்டிக் கழிக்கின்றன. வாடிக்கையாளருக்கும், தமக்கும் இடையில் உள்ள ஒப்பந்தத்தை மீறுகின்றன.

இது பெரும் நம்பிக்கை மோசடி. தண்டனைக்குரிய குற்றங்கூட. உதவ வேண்டிய வேளையில் வாடிக்கையாளரைக் கைவிட்டு, நட்டாற்றில் தவிக்கவிடும் வங்கிகள் யாருக்குத் தேவை?

இத்தகைய சூழ்நிலையில் மூலவளமும், சுற்றோட்டமும் இந்த மண்ணில் வாழும் மக்களுக்கும், அவர்களின் பொருளியல் சமூக மேம்பாட்டுக்கும் பயன்பட உதவும் வங்கிகளே தேவை. அதாவது தமிழர்கள் தங்களுக்கென்று தமிழ்ப் பகுதிகளில் வங்கிகளை நிறுவ வேண்டும். அபிவிருத்தி வங்கிகள் மட்டுமல்ல சாதாரண வர்த்தக வங்கிகளும் தேவை. ஒன்றல்ல; உரிய முறையில் இயங்கும் பல வங்கிகள் வந்தாலும் வரவேற்கலாம்.

தமிழ்ப் பகுதிகளில் நிதிப்புழக்கம் குறையும்போது சொந்த வங்கிகள் குறித்துப் பேசப்படுவதும், பின்னர் மறக்கப்படுவதுமே வழக்கமாகிவிட்டது. இனி அவ்வாறு பேச்சுடன் நிற்கமுடியாது.

நேற்று விட்ட தவறை இன்று இழைத்தலாகாது. ஏனெனில் தமிழர் வங்கிகள் நாளைக்கும் தேவை.

# கொடிகாமம், பளைப் பகுதியில் தென்னம் தோட்டங்கள் பாதிப்பு

கொடிகாமம், பெப். 27

போதிய பராமரிப்பு இன்றியும், தேங்காய்கள் முற்ற முன்னர் பிடுங்கப்பட்டு காசாக்கப்படுவதாலும் கொடிகாமம், பளைப் பகுதிகளில் தென்னை மரங்கள் பெரும் அளவு பாதிக்கப்படுகின்றன.

இப்பகுதியில் தேங்காய் ஒன்று 25 ரூபாவரை விற்கப்படுகிறது. வழமையாக சுமார் ஒன்றரை மாதத்துக்கு ஒரு தடவை தேங்காய் பிடுங்குபவர்கள், தற்போதைய உச்ச விலையைக் கருதி இரண்டு, மூன்று கிழமைகளுக்கு ஒரு தரம் பிடுங்குவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இப்பகுதியில் குத்தகைக்குக் கொடுக்கப்பட்ட தென்னம் தோட்டங்களுக்கும் இதே கதியே ஏற்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தற்போதைய நிலைமை தொடர்ந்தால் இன்னும் சில காலங்களில் இதன் தாக்கம் தெரியவரும் என்றும் தேங்காய் உற்பத்தி குறையும் என்றும் தெரிவிக்கப்படுகிறது. [இ-75]

## யாழ். இந்து நூற்றாண்டு சொற்பொழிவு

யாழ்ப்பாணம், பெப். 27

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி நூற்றாண்டு நினைவுச் சொற்பொழிவு வரிசையில், பசுபதிச் செட்டியார் நினைவுச் சொற்பொழிவு நிகழ்ச்சி நாளை வியாழக்கிழமை மாலை 4 மணிக்கு இந்துக் கல்லூரி குமாரசாமி மண்டபத்தில் நடைபெறும்.

இந்த நிகழ்ச்சியில் யாழ்ப்பாண நகரம்: மீள் அபிவிருத்தி சில திற முறைகள் என்னும் தலைப்பில் பேராசிரியர் கலாநிதி பாலசுந்தரம் பிள்ளை உரையாற்றவுள்ளார். [இ-5]

## காவலாளி மரணம்

கொடிகாமம், பெப். 27

கொடிகாமம் தென்மராட்சி கிழக்கு ப. நோ. கூ. சங்கக் காவலாளி கடமை நேரத்தில் இறந்து கிடக்கக் காணப்பட்டார்.

வரணியைச் சேர்ந்த குடும்பத்தவரான சி. கந்தையா [வயது 60] என்பவரே இறந்தவர் ஆவார். [இ-75]

## நவாலி வை.எம்.சி.ஏ

நவாலி, பெப். 27

நவாலி வை.எம்.சி.ஏ.யின் 100 ஆவது வருடாந்தப் பொதுக் கூட்டம் நாளை 28 ஆம் திகதி வியாழக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு வை.எம்.சி.ஏ மண்டபத்தில் நடைபெறும். [இ-100]

## முல்லை. மாவட்ட தர்மப் பணம்

ஒட்டுசுட்டான், பெப், 27

முல்லைத்தீவு மாவட்டத்தில் ஜனவரி மாதத்துக்கான பொதுசன உதவிப்பணம் [தர்மப்பணம்] தற்போது வழங்கப்படுகிறது. [இ-113]

## திறந்த பல்கலை. பாடநெறிக்கு விண்ணப்பம்

இலங்கை திறந்த பல்கலைக் கழக யாழ். பிராந்திய நிலையத்தில் சமூகவியல் அடிப்படைப் பாடநெறிக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இந்தப் பயிற்சி நெறிக்கான விண்ணப்பங்கள் எதிர்வரும் 28 ஆம் திகதிக்கு முன்னர் யாழ். பிராந்திய நிலையத்துக்கு அனுப்பவேண்டும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. [இ-3]

## அகதி முகாமினுள் நுழைந்தவர்

சரவணை சின்னமடு மாதா ஆலயத்தில் அமைந்துள்ள ஊர்காவற்துறை அகதிகள் முகாமுக்குள் நிறை வெறியில் புகுந்து தகாத முறையில் நடந்து கொள்ள முயன்றார் என்று கூறப்படும் நபர் ஒருவர் துரத்திப் பிடிக்கப்பட்டு, தீவக விடுதலைப் புலிகள் பொறுப்பாளரிடம் ஒப்படைக்கப்பட்டார். [இ-125]

## சீவல் தொழிலாளருக்கு பயிற்சி நிலையங்கள்

ஒட்டுசுட்டான், பெப். 27

வடக்கு -கிழக்கு மாகாணத்தில் உள்ள ஒவ்வொரு மாவட்டத்திலும் சீவல்தொழிலாளர்களுக்கான பயிற்சி நிலையங்கள் அமைக்கப்பட உள்ளன.

வடக்கு-கிழக்கு பொருளாதாரத்தைவளர்ப்பதற்கு சகல துறையினரும் ஊக்குவிப்புகளை இம் முயற்சிகளுக்கு வழங்க வேண்டுமென கூட்டுறவு அபிவிருத்தி உதவிஆணையாளர் திரு ரீ. சபாரத்தினம் கேட்டுள்ளார். [இ-113]

## நெடுந்தீவு - குறிகாட்டுவான் படகுச்சேவை ஸ்தம்பிதம்

நெடுந்தீவு, பெப். 27

டீசல் இல்லாததால் நெடுந்தீவு – குறிகாட்டுவான் அரச படகுச் சேவை ஸ்தம்பிதம் அடைந்தது.

நெடுந்தீவுக்குச் செல்வதற்காக திங்கட்கிழமை யாழ். நகரில் இருந்து குறிகாட்டுவானுக்குச் சென்ற பயணிகள் படகுச் சேவை நடைபெறாததால் நெடுந்தீவுக்குச் செல்ல முடியாத நிலையில் குறிகாட்டுவானில் தங்கவேண்டி ஏற்பட்டது.

நெடுந்தீவு உதவி அரசாங்க அதிபர் திரு. எஸ். வேல்முருகுப்பிள்ளை கடற்படையினருடனும், அரசாங்க அதிபருடனும்தொடர்புகொண்டு டீசல் பெற முயற்சி மேற்கொண்டபோதும், கடற்படையினர் டீசல் வழங்க முன்வரவில்லை. [இ-111]

## கமிஷன் இன்றி வங்கி கட்டளை

யாழ்ப்பாணம், பெப். 27

மக்கள் வங்கிக் கிளைகளில் 25 ஆயிரம் ரூபா வரையான தொகைக்கு தரகுக்கூலி [கமிஷன்] இல்லாமலேயே வங்கிக் கட்டளைகளைப் பெறலாம் என்று பிராந்திய முகாமையாளர் திரு. எஸ். அருளானந்தம் தெரிவித்தார்.

யாழ். மாவட்டத்தில் உள்ள மக்கள் வங்கிகளில் கிளைகள் அனைத்திலும், இந்த வசதியைப் பெறலாம் என்றும் அவர் தெரிவித்தார். இதே போன்று இலங்கை வங்கிக் கிளைகளிலும் கமிஷன் அறவிடப்படக்கூடாது என்று கொழும்பில் இருந்து அறிவிப்பு வந்திருப்பது தெரிந்ததே. [இ-3]

## சிப்பாய் உயிரிழப்பு

கொழும்பு, பெப். 27

அம்பாறை மாவட்டத்தில் விடுதலைப் புலிகள் நடத்திய தாக்குதல் ஒன்றில் விசேட அதிரடிப் பொலீஸ் படையைச் சேர்ந்த ஒருவர் உயிரிழந்தார் என்றும் இரண்டு அதிரடிப் படையினர் காயமடைந்தனர் என்றும் ஸ்ரீலங்கா இராணுவ வட்டாரங்கள் தெரிவித்தன. [உ-எ]

## விவசாயிகளுக்கு மண்எண்ணெய்

உரும்பராய், பெப். 27

நீர்வேலிப் பகுதி விவசாயிகளுக்கு விவசாய அட்டை ஒன்றுக்கு ஒரு லீற்றர் வீதம் மண்எண்ணெய் கட்டுப்பாட்டு விலைக்கு வழங்கப்பட்டது. சிற்றாரவையினர் இதற்கான ஏற்பாட்டைச் செய்திருந்தனர். [இ-154[

### வேம்படி மகளிர் கல்லூரி

## இடம்பெயர்ந்த மாணவியரை சமுகம்தரக் கோரிக்கை

வேம்படி மகளிர் கல்லூரி மாணவிகளில் குறிப்பிடத்தக்க எண்ணிக்கையானோர் இன்னும் வகுப்புகளுக்குச் சமுகம் அளிக்கவில்லை என்று கல்லூரி வட்டாரங்கள் கவலை தெரிவித்தன.

முதலாம் தவணை ஆரம்பமாகி இரண்டு வாரங்கள் கழிந்த போதிலும், இன்னமும் வகுப்புகளுக்குச் சமுகமளிக்காத மாணவிகள் இராணுவ நடவடிக்கை காரணமாக இடம்பெயர்ந்தவர்களும் —

போக்குவரத்து வசதியின்மை காரணமாகத் தூர இடங்களில் இருந்து வரமுடியாத ஒரு சிலருமே – என்றும் அறிய வருகிறது.

இடம்பெயர்ந்த மாணவிகள் கல்லூரிக்கு வராததால் அவர்கள் நிலை குறித்து எவ்வித முடிவையும் மேற்கொள்ளமுடியவில்லை. மதிய உணவு முத்திரை வழங்குவது போன்ற விடயங்களுக்குச் சரியான கணக்கெடுக்க முடியவில்லை. இந்நிலை தொடர அனுமதிக்க முடியாது. எதிர்வரும் முதலாம் திகதிக்கு முன்னர் வகுப்புகளுக்குச் சமுகம் அளிக்காத சகல மாணவிகளும், கல்லூரியை விட்டு விலகியவர்களாகக் கருதப்படுவர் என்று அதிபர் செல்வி இ. இராசரட்ணம் உதயனுக்குத் தெரிவித்தார். [அ]

## குவைத் நாடாளுமன்றம் குண்டு வைத்துத் தகர்ப்பு

முதல்நாள் தரையுத்தத்தின்போது ஈராக்கிய படைகள் குவைத்தில் நாடாளுமன்றக் கட்டடத்தைக் குண்டு வைத்துத் தகர்த்ததாக அறிவிக்கப்படுகிறது.

குவைத்தின் தேசிய தினம் சென்ற 25 ஆம் திகதி அனுஷ்டிக்கப்பட்டது. விரைவில் குவைத்தில் மீண்டும் தமது ஆட்சி ஏற்படும் என்று சவூதியில் தஞ்சமடைந்து உள்ள குவைத் மன்னர் தெரிவித்தார்.

## அத்தியாவசியப் பொருள்கள் தென்மராட்சியில் 'தாராளம்

தென்மராட்சி, பெப். 27

கொழும்பிலிருந்து வரும் அத்தியாவசியப் பொருள்களை சாவகச்சேரி கைத்தொழில் வர்த்தகர் சங்கம் தென்மராட்சிப் பகுதியில் உள்ள சகல சில்லறைக் கடைகளுக்கும் விநியோகம் செய்வதால் இப்பகுதியில் அத்தியாவசியப்பொருள்களைத் தாராளமாகப் பெறக்கூடியதாக உள்ளது. [இ-117]

## ஸ்கட் ஏவுகணைத் தாக்குதலில் 27 அமெரிக்க வீரர் உயிரிழப்பு

சவூதி அரேபியா, அல் அகபா நகரில் உள்ள அமெரிக்கப்படைத் தளம் ஒன்றின் மீது நேற்று ஈராக் நடத்திய ஸ்கட் ஏவுகணைத் தாக்குதலில் 27 அமெரிக்க வீரர்கள் உயிரிழந்தனர். 40 வீரர்களைக் காணவில்லை என்று அறிவிக்கப்படுகிறது. 98 வீரர்கள் காயமடைந்தனர். காணாமற்போன வீரர்களைக் கட்டட இடிபாடுகளுக்கு இடையில் தேடிக் கண்டுபிடிக்கும்பணியில் படையினர் ஈடுபட்டுள்ளனர்.

அமெரிக்கப்படையினர் தங்கியிருந்த கட்டடம் இடிந்து தரைமட்டமாகியது. வளைகுடாப்போர் ஆரம்பமான பின்னர் ஸ்கட் ஏவுகணைத் தாக்குதலில் பன்னாட்டுப் படையினர் மரணமானது இதுவே முதல்தடவை ஆகும் என்று கூறப்படுகிறது.

இதற்கு முன்னர் ஈராக் நடத்திய ஏவுகணைத் தாக்குதலில் சவூதிஅரேபியாவில் ஒருவரும், இஸ்ரவேலில்மூன்று பேரும் மரணமானார்கள். அவர்கள் அனைவரும் சிவிலியன்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

## மூன்று மாத காலப் பயிற்சி

யாழ்ப்பாணம், பெப்.27

ஜெய்ப்பூர் செயற்கைக்கால் பாவனையாளர்களுக்கும், இளம்பிள்ளைவாத நோயினால் பாதிக்கப்பட்டோருக்குமான இலவசப்பயிற்சி ஒன்றை யாழ். ஜெய்ப்பூர் செயற்கைக்கால் தொழிற்சாலை நடத்தவிருக்கிறது.

மூன்று மாத காலம் நடைபெறவுள்ள இந்த பயிற்சி நெறியில் சேரவிரும்புவோர் எதிர்வரும் 28 ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பிக்குமாறு கோரப்பட்டுள்ளது. [இ-3]

## 500 எண்ணெய் வயல்களில் தீ!

★ குவைத்தில் உள்ள 950 எண்ணெய் வயல்களில் சுமார் 500 வயல்கள் ஈராக்கிய படைகளினால் தீ வைத்து எரிக்கப்பட்டன என்று சவூதி அரேபியாவில் இராணுவ அதிகாரிகள் தெரிவித்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெரியவிளான், சுதுமலை மக்களுக்கு நிவாரணம்

யாழ்ப்பாணம், பெப். 27 இலங்கை வங்கி மானிப்பாய் கிளையில் எதிர் வரும் சனிக்கிழமை ரூபா 4 ஆயிரம் நிவாரணக் [உற்பத்தித் திறன்] கொடுப்பனவு வங்கிக் கட்டளையாக வழங்கப்பட இருக்கிறது.

நிவாரணம் வழங்கப்பட வுள்ள கி. சே. பிரிவுகளும், குடும்பங்களின் எண்ணிக்கையும் வருமாறு:-

★ பெரிய விளான் [ஜே/72]—378

★ சுதுமலை [ஜே/62]—52

[ஒ]

## சதாம் ஹுசேன்.....

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

தில் நிலை கொண்ட ஈராக் படைகள் மீது விமானத் தாக்குதல்களையே நடத்தின.

கடந்த 23 ஆம் திகதி தரையுத்தம் ஆரம்பமானது தரையுத்தம் ஆரம்பமாகிய 48 மணி நேரத்தில் ஈராக். குவைத்தில் இருந்து வெளியேறுவதாக அறிவித்தது.

குவைத்தில் இருந்து வெளியேறி கடந்த ஆண்டு ஆகஸ்ட் முதலாம் திகதி இருந்த இடங்களுக்குச் செல்லும்படி ஈராக்கிய ஜனாதிபதி சதாம் ஹுசேன் தமது படைகளுக்கு உத்தரவிட்டிருப்பதாக பக்தாத் வானொலி நேற்று அறிவித்தது.

இந்த அறிவிப்பை அடுத்து ஈராக் படைகள் குவைத்திலிருந்து வெளியேறத்தொடங்கியபோதும் நேசப் படைகள் விடுவதாயில்லை தொடர்ந்து தரை மற்றும் வான் தாக்குதல்களை நடத்தி வருகின்றன. இதனால் ஈராக் படைகள் வாபஸாவது பாதிக்கப் பட்டிருப்பதாக ஈராக் அறிவித்தது.

ஆனால் குவைத் தலைநகரில் இருந்து ஈராக்கிய படைகள் பூரணமாக நேற்று வெளியேறின.

ஆயுதங்களையும் கனரக வாகனங்களையும் கைவிட்டு விட்டே படையினர் வாபஸ் பெற்றனர்.

அதனைத் தொடர்ந்து குவைத் நகர விதிகளில் அங்குள்ள மக்கள் திரண்டு நின்று மகிழ்ச்சி ஆரவாரம் செய்தனர்.

நகரின் பாதுகாப்பு குறித்து உறுதிப்படுத்தும் வரை மக்களை வீடுகளில் இருக்கும்படி சவூதி அரேபியாவில் இயங்கும் குவைத் வானொலி கேட்டுக் கொண்டது.

பன்னாட்டுப் படையினர் விரைவில் விமானங்கள் மூலம் குவைத் தலைநகரில் எந்த நேரமும் தரை இறங்குவர் என்றும் குவைத் வனொலி தெரிவித்தது.

இதற்கிடையில்—

ஈராக் படைகள் வாபஸாவதால் தொடர்ந்து யுத்தத்தை மேலும் நடத்துவதற்கு எதுவித காரணமும் இல்லை என்று சோவியத் யூனியன் கூறியிருக்கிறது.

## தோற்று...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

''படுதோல்வியின் மத்தியில் வெற்றிக்கு உரிமை கோருகிறார் சதாம் ஹுசேன். குவைத்தை அவர் தானாக விட்டுக்கொடுக்கவில்லை.

எஞ்சிய படைவலிமையை வைத்துக்கொண்டு மத்திய கிழக்கில் தனது அதிகாரத்தை நிலைநாட்ட சதாம் முயற்சிக்கிறார். இதிலும் அவர் தோல்வி காணுவார்.

சமாதானத்தில் சதாமுக்கு உண்மையான அக்கறை இல்லை. தனது படைகளை மீண்டும் தயார் செய்து இன்னொரு நாளைக்கு யுத்தத்தை நடத்துவதே அவரின் எண்ணமாகும்.

குவைத் மீதான ஈராக்கின் உரிமையை அவர் இன்னும் கைவிடவில்லை.

இதற்கு முரணாக, அவர் குவைத்தை தனது பிரதேசமாக உரிமை கோருவதை வலியுறுத்துகிறார். ஐ. நா. பாதுகாப்புச் சபை தீர்மானங்களை சதாம் இன்னும் ஏற்காதது இதற்கு எடுத்துக் காட்டாக இருக்கிறது

''ஆகவே பன்னாட்டுப் படையினர் தொடர்ந்தும் அதே வேகத்துடன் ஈராக் படை மீது தாக்குதல்களை நடத்துவர்'' — என்றார் அவர்,


தடைப்பட்ட O/L 90 பரீட்சைக்கு
தோற்றவிருந்த மாணவர்களுக்கு மாதாந்த
பயிற்சிப் பரீட்சையும்
இலவச கருத்தரங்கும்

★ முதல் பயிற்சிப் பரீட்சை - 28-02-1991இல்.
★ எல்லாப் பாடங்களிலும் பகுதி-I மட்டும் நடத்தப்பட்டு, உடனடியாகத் திருத்தி விடைத் தாள் வழங்கப்படும்.
★ எமது நிறுவனத்தில் கற்கின்ற, கற்காத அனைத்து மாணவர்களும் பங்குபற்றலாம்.

| முற்பகல் - பரீட்சை | பிற்பகல் - கருத்தரங்கு |
|---|---|
| 8-00 — கணிதம் I | 1-00 — ஆங்கிலம் |
| 9-00 — விஞ்ஞானம் I | 2-00 — சமூகக்கல்வி |
| 10-00 — தமிழ் I | 3-00 — தமிழ் |
| 11-00 — சமூகக்கல்வி I | 4 00 — விஞ்ஞானம் |
| 12-00 — ஆங்கிலம் I | 5-00 — கணிதம் |

★ அடுத்த பரீட்சை எல்லாப் பாடங்களிலும் பகுதி - I + II ஐ முழுப்பாடத்திட்டமும் அடங்கியதான பயிற்சிப் பரீட்சையாக நடத்தப்படும்.

மேலதிக விவரங்களுக்கு,
BOND INSTITUTES
58 A, ஸ்ரான்லி வீதி - யாழ்ப்பாணம்.
[15991]


## நாளை மாசி மகம்

யாழ்ப்பாணம், பெப். 27 நாளை வியாழக்கிழமை மாசி மகத் தினமாகும். அதையொட்டிகுடாநாட்டில் உள்ள பல ஆலயங்களில் விசேட அபிசேக ஆராதனைகளும், திருஉலாக்களும் இடம் பெறும். பல அம்மன் கோவில்களில் நடந்து வரும் இலட்சார்ச்சனையும் நாளை பூர்த்தியுறும். [அ]

## செ. மிளகாய் விலை வீழ்ச்சி

தென்மராட்சி, பெப். 27 கொழும்பிலிருந்து நேற்று பெருமளவு செத்தல் மிளகாய் சாவகச்சேரிக்கு வந்துள்ளதால் அதன் விலை திடீரென வீழ்ச்சியடைந்துள்ளது. [ஒ-117]

## வீரமரணம்

கடந்த 13 ஆம் திகதி முல்லைத்தீவு, சிலாவத்தையில் இராணுவத்தினருடன் ஏற்பட்ட மோதலின்போது காயமடைந்து சிகிச்சைபெற்று வந்த விடுதலைப் புலிகள் இயக்கப் போராளியான பலேந்திரன் [குமாரசாமி பலசுப்பிரமணியம் - முள்ளியவளை] நேற்று வீரமரணமடைந்தார். [ஒ 5]

## பல்கலைக் கழக மாணவர் கூட்டம்

யாழ்ப்பாணம், பெப். 27 யாழ் பல்கலைக்கழக அனைத்துப் பீட மாணவர்களுக்குமான பொதுக்கூட்டம் ஒன்று இன்று நண்பகல் 11 மணிக்கு கைலாசபதி கலையரங்கில் நடைபெறவிருப்பதாகமாணவர் அவை அறிவித்துள்ளது.

மன்னார் வங்காலை பகுதியில் நடைபெற்ற அதிபர், ஆசிரியர்கள் மற்றும் ஏனையோர் படுகொலைச் சம்பவங்களுக்கு எதிர்ப்புத் தெரிவிப்பது பற்றி இக் கூட்டத்தில் ஆராயப்படும் என்று தெரிவிக்கப்பட்டது.

## நாளை நடக்கும் கூட்டம்

யாழ்ப்பாணம், பெப். 27 புதிய முறையில் போக்குவரத்து வண்டில்கள், நீரிறைக்கும் சாதனங்கள் போன்றவற்றை உருவாக்கக்கூடிய தகுதியான ஆலோசனைகளை வழங்கக்கூடியவர்களுக்கான கலந்துரையாடல் ஒன்று நாளை கொக்குவில் இந்துக் கல்லூரியில் பிற்பகல் 3 மணிக்கு நடைபெறவுள்ளது.

தொழில் நுட்பப் பொறியியல் அனுபவம் உள்ளவர்களையும் ஆர்வமுள்ளவர்களையும் கூட்டத்தில் கலந்து கொள்ளுமாறு ''றூட்'' நிறுவனம் கேட்டுள்ளது. [ஒ]

## மண் சரிவுக்கு 200 பேர் பலி!

லண்டன், பெப். 26 பப்புவா நியுகினி நாட்டில் நேற்று ஏற்பட்ட மண்சரிவில் சுமார் 200 பேர் நிலத்தில் புதையுண்டு உயிரிழந்தனர் என்று அறிவிக்கப்படுகிறது. [அ-எ]

## யுத்தம் தொட.....

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

ஜனாதிபதி சதாம் பகிரங்கமாக அறிவிக்க வேண்டும்.

அதன் பின்னர் ஆயுதங்களைக் கீழே போட்டுவிட்டு வெளியேறுமாறு தமது படைக்கு சதாம் உத்தரவிட வேண்டும். அதன் பின்னர் தான் பன்னாட்டுப் படையினர் தாக்குதலை நிறுத்துவர்''

''அத்தகைய அறிவிப்பை சதாம் விடுக்கும் வரை தற்போதைய படை விலகல் பற்றிய அறிவிப்பு சந்தேகமான ஒன்றாகவே அமெரிக் [illegible] தொடரும்'' — என்று பேச்சாளர் சொன்னார்.

# யாழ். இந்துவுக்கு ரூபா 10 லட்சம் ஒதுக்கீடு

யாழ்ப்பாணம், பெப். 27 யாழ். இந்துக் கல்லூரியின் நூற்றாண்டு நினைவு கட்டட நிதிக்கு பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்ட நிதியிலிருந்து ரூபா 10 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

இதற்கான உத்தரவு யாழ். செயலகத்துக்குக் கிடைத்துள்ளது.

தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் தமக்கு ஒதுக்கிய நிதியிலிருந்தே இப் பணத்தை வழங்கியதாகத் தெரிய வருகிறது. [ஒ-5]

## கைது!

சுமார் 15 லட்சம் ரூபா பெறுமதியான ஹெரோயின் போதை வஸ்துவுடன் கட்டுநாயக்கா விமான நிலையத்தில் வந்து இறங்கிய பாகிஸ்தான் பிரசை ஒருவரை சுங்கத் திணைக்கள அதிகாரிகள் கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு கைது செய்தனர்.

# மரண அறிவித்தல்கள்

## பொன்னம்பலம் கனகசபை

வடலியடைப்பை பிறப்பிடமாகவும், இணுவிலை வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னம்பலம் கனகசபை 26-02-1991 அன்று இறைவனடி எய்தினார்.

இவர் பராசக்தியின் அன்புக் கணவரும், கந்தசாமி [கனடா], பரமானந்தன் [கனடா], தெய்வமணி [கனடா], சிவலோகநாயகி [கனடா] ஆகியோரின் தந்தையும், காலம்சென்ற பரமநாதன், ரஞ்சனி, ராசதேவி ஆகியோரின் அன்பு மாமனும் ஆவார்.

நல்லடக்கம் 27-02-1991 இன்று காரைக்கால் மயானத்தில் 12 மணியளவில் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்: பராசக்தி

[15673]

## பிரான்சிஸ்பிள்ளை யோசவ்

புலோலியைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், அச்சுவேலியை வசிப்பிடமாகக் கொண்ட ஒய்வு பெற்ற சுகாதாரப் பரிசோதகருமாகிய பிரான்சிஸ் பிள்ளை யோசவ் 26-02-1991 இல் காலமாகிவிட்டார்.

இவர் பேளியின் அன்புக் கணவரும், யூக்கறிஸ்ரா, மனோராஜ் [தேக்கி], கிறிஸ்ரி [பிரான்ஸ்], கிறிஸ்ரிற்றா [கனடா], எவறிஸ்ரா [பிரான்ஸ்], அசிசிற்றா. நிறஞ்சலா [காமல் கொன்வன்ற், கம்பகா], தியோஜிஸ் [கனடா], விஜித்தா ஆகியோரின் அன்புத் தந்தையும், அன்ரன், றெஜி [கனடா], சகாயநாயகம் [பிரான்ஸ்] ஆகியோரின் அன்பு மாமனாரும், டேனி, வாசுகி, தொயில், ஜொயில் ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை புனித மரியாள் பேராலயத்தில் இன்று [27-2-91] பிற்பகல் 4-00 மணிக்கு நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

தகவல்: ஞா. சந்தியாப்பிள்ளை

ஆயர் இல்லம்,
யாழ்ப்பாணம்.

[15674]

## செல்வி வசந்தி திருவிளங்கம்

[பழைய மாணவி பரு. மெதடிஸ்த பெண்கள் கல்லூரி]

தும்பளையை சேர்ந்த செல்வி வசந்தி திருவிளங்கம் நேற்று [26 - 2 - 91] காலமாகிவிட்டார்.

இவர் கா. திருவிளங்கம் [இடைக்காடு], பாக்கியலட்சுமி தம்பதிகளின் ஏக புதல்வியும், சிவநேசனின் அன்புத் தந்தையும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று [27-02 91] நடைபெறும்.

தகவல்: வி. பரமேஸ்வரன்

சாஸ்திரியார் ஒழுங்கை:
துப்பளை, பருத்தித்துறை.

[15675]

## செல்லத்துரை செல்வரெத்தினம்

[இளைப்பாறிய தபால் ஊழியர்]

அரியாலையைச் சேர்ந்த செல்லத்துரை செல்வரெத்தினம் அவர்கள் காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லத்துரை செல்லம்மா தம்பதிகளின் ஏக புதல்வனும், காலஞ்சென்ற அண்ணாவி சபாபதிப்பிள்ளை அவர்களின் மூத்த மருமகனும், அம்பிகாவின் அன்புக் கணவரும், சண்முகலிங்கம், ஜானகி [திருக்குடும்ப கன்னியர் பாடசாலை], சாவித்திரி [தாதி, யாழ். போதனா வைத்தியசாலை], சத்தியலிங்கம் தேவகி [ஆசிரியை, ஸ்ரீ பார்வதி வித்தியாசாலை, அரியாலை], கௌரி [யாழ். பல்கலைக்கழக மருத்துவ பீடம்] ஆகியோரின் அன்புத் தந்தையும், சத்தியபாமா, நாகேந்திரன், குமுதினி ஆகியோரின் அன்பு மாமனாரும், தம்பித்துரை, நடேசர், கணேசர், பாலசிங்கம், அம்பாலிகை, ராதா சபாபதி [ஆசிரியை, கரம்பன் சண்முகநாத வித்தியாசாலை] ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் 27-02-91 புதன்கிழமை பி. ப. 3.00 மணிக்கு தகனக்கிரியைகளுக்காக அரியாலை சித்துப்பாத்தி மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளுகின்றோம்.

தகவல்! சங்கீதபூஷணம் ச. பாலசிங்கம்
[நுண்கலைக் கல்லூரி மருதனாமடம்]

14, வில்வந்தெரு வீதி,
அரியாலை,
யாழ்ப்பாணம்.

[15626]

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் [பிறைவேட்] லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி. 292/2 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 27 - 2 - 1991 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org